**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ஆம் நாள் திங்கள் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.306/2017** பி.வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சொக்கலிங்கம் | **வயது** | : | 84 |
| **த.பெ** | : | வரத கவுண்டர் | **தாலுக்கா** | : | ஆரணி |
| **கிராமம்** | : | கொளத்தூர் | **தொழில்** | : | விவசாயம் |

**16.02.2026 – பி.வா.சா.2 குறுக்கு விசாரணை**

1)நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என்ன விவரம் நான் கூறியுள்ளேன் என்றால் முருக கவுண்டர் கொளத்தூரிலிருந்து 1 மைல் தூரத்திலிருந்த என் வீட்டிற்கு வருவார், போவார் 1 மாதம் தங்குவார் என்ற விவரம் கூறி தான் முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி முருக கவுண்டர் எனக்கு எப்படி தெரியுமா என்றால் அவர் எனது சின்னமாமனார் ஆவார். மேற்படி முருக கவுண்டர் என்னுடைய சின்ன மாமனார்எ ன்ற விவரத்தை முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். வாதி,பிரதிவாதிகள் மற்-றும் அவர்களின் நிலங்களை பற்றி தெரியும்எ ன்று முதன்மை விசாரணை வாக்கமூலத்தில் நான் கூறியுள்ளேன் ,அப்படியிருக்கும் பட்சத்தில் வாதி யார் என்றால் சேகர் ஆவார். பிரதிவாதிகள் யார் யார் என்றால் சேகர், வேணுகோபால், முருகன் (இறந்துவிட்டார்) ஆவார்கள்.

2) நிலங்கள் எந்த ஊரில் உள்ளது என்றால் காலசமுத்திரத்தில் மொத்த வழக்கு சர்வே நெம்பரும் உள்ளது. என்ன சர்வே நெம்பர், விஸ்தீரணம் இந்த விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. முருக கவுண்டர் அவர் மகனான 2 ம் பிரதிவாதி வேணுகோபாலுக்கு உயில் எழுதிவைத்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலை நான் பார்த்ததும் இல்லை, அதில் உள்ள சொத்துக்களின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியாது, உயில் எழுதப்பட்டது என்றுதான் என்று என்னிடம் சொன்னதால் தெரியும், மற்ற விவரங்கள் தெரியாது. முருக கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது என்றால் 4 பிள்ளைகள் அதில் 2 மகன், 2 மகள்கள் உள்ளார்கள். முருக கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை, 1997 ல் இறந்தார், மாதம், தேதி ஞாபகமில்லை.

3)முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிடப்பட்டுள்ள உயில் தேதி எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் என்னுடைய முதன்மை விசாரணை வாக்குமுலத்தில் உயிலின் தேதியை குறிப்பிடவில்லை. முருக கவுண்டர் இறந்தபிறகு அவரது உடலை எங்கு அடக்கம் செய்தார்கள் என்றால் காலசமுத்திரத்தில் அடக்கம் செய்தார்கள். நான் முருக கவுண்டர் இறப்பிற்கு

சென்று என் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். முருக கவுண்டர் இறப்பிற்கு யார் யார் வந்தார்கள், வரவில்லை என்று தெரியுமா என்றால் முருக கவுண்டரின் சம்சாரம் மற்றும் 2 மகள்கள் வரவில்லை. மேற்படி சம்சாரம் மற்றம் 2 மகள்கள் முருக கவுண்டரின் இறப்பிற்கு வரவில்லை என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அவரின் இறுதிசடங்கில்இறுதிவரை இருந்துவிட்டு தான் சென்றேன்.

4)இந்த வழக்கில் சொத்துக்களை யார்யார் எவ்வளவு அனுபவிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எதற்காக முருக கவுண்டர் 1 மாதம் என்வீட்டில் வந்து தங்குவார் என்றால் அவருக்கு மனகஷ்டம் இருந்ததால் தங்குவார். நான் தற்போது வாக்குமூலம் கொடுக்கிறேன் அதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் வரவில்லை. நான் வேணுகோபால் சாட்சியம் அளிக்க அழைத்ததால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். முருக கவுண்டர் எனக்கு சின்னமாமனார் கிடையாது, வேணுகோபால் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சேகர் என்னை பார்த்ததே கிடையாது என்றால் சரியல்ல, அவர் என்னை பார்த்துள்ளார்.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.02.19 10:07:40 +0530

District Munsif,
Polur.